**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW12**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **அரசகுமார்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 25th day of November 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்ட்டுள்ளது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சலூன்கடை வைத்துள்ளேன். இந்த வழக்கில் இறந்துபோன ரஞ்சித்குமாரை தெரியும். ரஞ்சித்குமார் என் சலூன் கடைக்கு வருவார். அ.சா.9 பிரகாஷ் என் கடையில் வேலை செய்தவர். 17.12.2020 அன்று மாலை 3.00 மணிக்கு ரஞ்சித்குமாரின் வண்டியின் சாவி என் கடைக்குள் இருந்ததால் அதை எடுத்துத்தரும்படி எனக்கு போன் செய்தார். நான் சுமார் 3.30 மணிக்கு கடைக்கு சென்ற போது அங்கு ரஞ்சித்குமார் இருந்தார். அப்போது கடை பூட்டியிருந்தது. அதன்பிறகு முருகானந்தத்திற்கு

நான் போன் செய்தேன். அப்போது பிரகாஷ் அங்கிருந்தார். நானும் ரஞ்சித்குமாரும் முருகானந்ததின் வீட்டிற்கு என் வண்டியில் சென்று பிரகாஷிடம் சாவியை வாங்கிக்கொண்டு வந்தோம். முருகானந்தத்தின் வீடு ைஹஸ்கூல் மேட்டில் உள்ளது. கடை சாவியை வாங்கிக்கொண்டு நானும் ரஞ்சித்குமாரும் என் சலூன்கடைக்கு வந்து ரஞ்சித்குமாரின் வண்டி சாவியும், அதற்குரிய இருசக்கர வாகன ஸ்டாண்ட் டோக்கனும் எடுத்து ரஞ்சித்குமாருக்கு கொடுத்தேன். அதன்பிறகு நானும் ரஞ்சித்குமாரும், இருசக்கர வாகனத்தில் வேலாயுதம் பைபாஸ்ரோட்டில் உள்ள ஸ்டாண்டில் ரஞ்சித்குமார் அவரது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு நான் எனது வண்டியிலும், ரஞ்சித்குமார் அவரது வண்டியிலும் நேராக பைபாஸ் சென்றோம். அப்போது முருகானந்தமும், பிரகாஷ்–ம் நடந்து வந்தார்கள். பிரகாஷ் ரஞ்சித் இருசக்கர வாகனத்திலும், என் இருசக்கர வாகனத்தில் முருகானந்தமும் கரூர் பைபாசில் உள்ள மதுபானக்கடைக்கு சென்றோம். என்னையும், முருகானந்தத்தையும் வேலாயுதம்பாளையதில் உள்ள கருர் பைபாஸில் உள்ள பெட்ரோல் பங்கில் நிற்க சொல்லிவிட்டு ரஞ்சித்குமாரும், பிரகாஷ்–ம் இருசக்கர வாகனத்தில் மதுபானக்கடைக்கு சென்ற போது ரஞ்சித்தை வெட்டிவிட்டார்கள் என்று பிரகாஷ் ஓடிவந்து என்னிடம் ரஞ்சித்தை வெட்டிவிட்டார்கள் என்று கூறினேன். உடனே நானும் முருகானந்தமும், பிரகாஷ்ம் பயந்து கொண்டே ஒரே வண்டியில் வேலாயுதம்பாளையம் கரூர் பைபாஸ்ரோட்டில் அவர்கள் இருவரையும் இறக்கிவிட்டு விட்டு நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பிரகாஷ் யார் ரஞ்சித்குமாரை வெட்டினார்கள் என்று என்னிடம் சொல்லவில்லை. இது சம்ம்நதமாக காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>7 மற்றும் 9 ஆம் எதிரிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன ரஞ்சித் யார் வீட்டில் தங்கியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. இறந்துபோன ரஞ்சித் கடைசியாக எப்போது என் கடைக்கு வந்தார் என்று தேதி ஞாபகமில்லை. நீங்கள் கூறுவது போல் சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்ற சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.11.25 18:10:17 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW13**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **சதீஷ்குமார்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 25th day of November 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ரஞ்சித்குமார் என் உடன்பிறந்த மூத்த சகோதரர் ஆவார். ரஞ்சித்குமார் இறப்பதற்கு ஒருநாள் முன்பு திருச்சிக்கு என்னைப்பார்க்க வந்திருந்தார். ரஞ்சித்குமார் திருச்சிக்கு எங்கள் ஆயா இறந்ததற்கு வந்த போது கரூரில் அவருக்கு பிரச்சனை இருப்பதாக கூறினார். அவர் கூட வேலை செய்த நபர்கள் ஒயர் எடுத்துவிட்டார்கள் என்பதால் பிரச்சனை ஏற்பட்டு விட்டது என்று கூறினார்கள். கலையரசன்

மற்றும் அவருடன் வேலை செய்யும் நபர்கள் ஒயரை எடுத்துவிட்டதாக ரஞ்சித்குமார் என்னிடம் கூறினார். ஜெகதீசன் என்பவரை திருச்சி சிறையில் மனுப்போட்டு என் சகோதரர் ரஞ்சித்குமார் பார்க்க சென்றார். ஜெகதீசனை பார்த்தபிறகு என் சகோதரர் ரஞ்சித்குமார் என்னிடம் வந்து ஜெகதீசனுக்கும், கூல்மணிக்கும் சிறைக்குள் ஏதோ தகராறு இருப்பதாக என்னிடம் கூறினார். என் அண்ணன் ரஞ்சித்குமார் வேலாயுதம்பாளையத்தில் இருந்தார். என் அண்ணன் ரஞ்சித்குமார் சிறையில் இருந்த கூல்மணியை மனு செய்து பார்த்துள்ளார். அப்போது சிறையில் ரஞ்சித்குமாருக்கும், கூல்மணிக்கும் சிறையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்றும், கூல்மணி என் அண்ணனை நீ திருச்சியில் தானே இருப்பாய் உன்னை பார்த்துக்கொள்கிறேன என கூறியதாக என்ன அண்ணன் என்னிடம் கூறினான். அதன்பிறகு என் அண்ணன் வேலாயுதம்பாளையத்தில் வேலை செய்தார். விக்கி என்பவர் கலையரனின் நண்பர். கூல்மணி கலையரசனின் நண்பர் ஆவார். கூல்மணி பெயிலில் வெளியில் வந்த பிறகு தான் கூல்மணியும் கலையரசனும் சேர்ந்து என் சகோதரர் இருக்கும் இடத்தை நோட்டமிட்டு அவரை என் அண்ணன் ரஞ்சித்குமாரை வெட்டியுள்ளார்கள். ரஞ்சித்குமாரை வெட்டிய விவரத்தை காவல்துறையினர் சொல்லித்தான் எனக்கு தெரியும். கரூர் அரசு மருத்துவமனையில் என் சகோதரர் ரஞ்சித்குமார் பிரேதத்தை பார்த்தேன். என்னை காவல்துறையினர் விசாரித்த போது என்னிடம் ரஞ்சித்குமார் சொன்ன விவரங்களை காவல்துறையினரிடம் சொன்னேன். ஆஜர் எதிரி தான் கூல்மணி ஆவார். (சாட்சி சரியாக கூல்மணியை அடையாளம் காண்பித்தார்.) இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>7 மற்றும் 9 ஆம் எதிரிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்மந்தமாக போலிசார் கரூர் அரசு மருத்துவமனையில் என்னை விசாரித்தார்கள். காவல்துறையினர் என்னை 3 முறை விசாரித்தார்கள். வேலாயுதம்பாளையத்தில் உள்ள வான்மதி என்பவர் தான் எனக்கு போன் மூலம் என் சகோதரர் ரஞ்சித்குமாரை வெட்டியதாக தகவல் சொன்னார். வான்மதிக்கும் உங்கள் சகோதரர் ரஞ்சித்குமாருக்கும் திருமணத்தை மீறிய உறவுமுறை இருந்து வந்தது என்று சொன்னால் கேள்விப்பட்டுள்ளேன். என் சகோதரரக்கு திருமணம் ஆகி 2 குழந்தைகள் உள்ளது. ரஞ்சித்குமாரின் மனைவி பெயர் புனிதவள்ளி. புனிதவள்ளி புகார் கொடுத்து உங்கள் சகோதரர் இறப்பதற்கு 15 நாட்கள் முன்பு சிறை சென்று வந்தார் என்று சொன்னால் நான் கேள்விப்பட்டேன். சம்பவ சமயத்தில் என் சகோதரர் வேலாயுதம்பாளையத்தில் உள்ள வான்மதி கடையில் இருந்து கொண்டிருந்தாக கேள்விப்பட்டேன். உங்கள் சகோதரர் மீது திருச்சி மாவட்டத்தில் பல குற்றவழக்குகள் இருந்தது என்றால் 75 வழக்கு மட்டும் தான் இருந்தது. பல வழக்குகள் இருந்ததால் தான் உங்கள் சகோதரர் திருச்சியிலிருந்து வேலாயுதம்பாளையம் வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல அவர் வேலை செய்வதற்காகத்தான் வேலாயுதம்பாளையம் வந்திருந்தார். உங்கள் சகோதரர் மீது திருச்சியில் பல வழக்குகள் இருந்ததால் தான் போலிசார் கெடுபிடியினால் கரூர் வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சகோதரர் மீது பல கொள்ளையடித்த வழக்குகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சகோதரர் ரஞ்சித்குமாருக்கும் கொள்ளையடித்து பிரிப்பதில் மற்ற நபர்களுடன் தகராறு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் அண்ணன் ரஞ்சித்குமார் வான்மதியுடன் தகாத உறவு இருந்ததால் வான்மதியின் கணவருக்கும் உங்கள் அண்ணன்

ரஞ்சித்குமாருக்கு பிரச்சனை இருந்து வந்தது என்றால் தெரியாது. உங்கள் அண்ணன் ரஞ்சித்குமாருக்கும் வான்மதியின் கணவர் லோகநாதனுக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் தெரியாது. உங்கள் அண்ணன் ரஞ்சித்குமார் உங்கள் அண்ணியுடன் பிரிந்து வாழ்வதால் புனிதவள்ளி குடும்பத்திற்கும் உங்கள் அண்ணனுக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. ஜெகதீசனுக்கும், உங்கள் அண்ணன் ரஞ்சித்குமாருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. கலையரசனுக்கும், கூல்மணிக்கும், உங்கள் அண்ணன் ரஞுசித்குமாருக்குமிடையே எந்த வித முன்விரோதமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதின்பேரில் நீங்கள் பொய்யாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. கூல்மணி உங்களுக்கு யார் என்று தெரியாது என்றும் காவல்துறையினரால் அடையாளம் காண்பித்து தான் கூல்மணியை அடையாளம் காட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.11.25 18:10:24 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW14**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மாயவன் | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 25th day of November 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொடுமுடிசாலையில் உள்ள செல்வநகரில் குடியிருந்து வருகிறேன். நான் பழைய இருசக்கர வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். நவீன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எங்கள் கடையில் பழைய SPLENDOR இருசக்கர வாகனத்தை வாங்கினார். அந்த வாகனத்தின் பதிவு எண் TN 48 J 1796. **வாகனம் வாங்கியத்காக நான் கொடுத்த ரசீது இது தான். அது அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 48 J 1796 பதிவு எண் கொண்ட வண்டியின் பதிவு சான்றிதழ் இது தான். அது அ.சா.ஆ.21**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.11.25 18:10:30 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.